[10th September 1958

Files pending for over six months

* 128 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

சென்னை சர்க்காரின் காரியாலயங்களில் 6 மாதத்திற்கு மேல் கட்டி வைக்கப்பட்டுள்ள பைல்கள் எத்தனை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The time and labour involved in collecting the information required will not be commensurate with the purpose that it may serve. The office manuals and instructions issued from time to time provide for an effective check of delays in the despatch of business in each office.

Sanitary Inspector's courses

* 129 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the places where the Sanitary Inspector's courses are given at present; and

(*b*) whether there is any proposal to start the course at Madurai?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Madras Medical College and Stanley Medical College, Madras.

(*b*) No, Sir.

SRI K. RAMACHANDRAN : மதுரைக்குப் பக்கத்தில் உள்ள நாலு ஜில்லாக்களில் இருந்து படிக்க வரக்கூடிய மாணவர்கள் செலவு குறைவாகப் படிப்பதற்கு ஏதுவாக இருக்குமாகையால், அதுவும் அங்கு ஒரு மெடிகல் காலேஜும் இருக்கிறது என்பதையும் கருத்திற்கொண்டு இந்த கோர்ஸை மதுரையில் வைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மதுரையில் இந்த காலேஜில் இன்னும் புதிய டிப்பார்ட்மெண்ட்கள் எல்லாம் ஏற்படவில்லை. அதற்கு இடவசதி வேண்டியிருக்கிறது. இதற்கு வேண்டிய இடவசதி ஏற்பட்ட பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

SRI M. K. SOMASUNDARAM : சுகாதார கோர்ஸ் படித்து வெளியே வருகிறவர்களை பஞ்சாயத்து போர்டுகளில் நியமிக்க அரசாங்கம் உத்தரவு இடுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கேள்வி பயிற்சியைப் பற்றியது. உத்தியோகம் கொடுப்பது பற்றி தனியாக கேள்வி கேட்க வேண்டும்.

Raw Hides and Skins

* 130 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have recommended to the Union Government for the liberal issue of licences for the import of raw hides and skins?

THE HON. SRI R. VENKATARAMAN : No recommendation has been made by this Government to the Central Government as no representation regarding any scarcity in respect of hides and skins in the State has been made to this Government. However, Essentiality Certificates for the import of raw hides and skins have been issued to applicants in a few individual cases.

10th September 1958]

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that more than sixty per cent of the tanneries in South India have closed down for want of raw hides?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the Government are aware of the closure of tanneries. But they are not aware that it is due to lack of raw hides and skins.

Government Estate

*** 131 *Q.*—SRI N. R. THIAGARAJAN :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

சென்னை கூவம் நதியிலிருந்து சேப்பாக் வரையிலுள்ள மவுண்ட் ரோட் சர்க்கார் எஸ்டேட்டில் (**Government House Estate**) மவுண்ட் ரோடை ஒட்டிய பகுதியில் கடைகள் கட்டி வாடகைக்கு விட அல்லது கடை கட்டிக் கொள்பவருக்கான மனையையாவது குத்தகைக்குவிட சர்க்காருக்கு ஏதேனும் உத்தேச முண்டா ?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI A. A. RASHEED : Sir, is there any proposal to release a portion of the Government Estate land in Mount Road to widen the Mount Road from 'The Hindu' office to the Elphinstone Talkies?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

Kalainesan

*** 132 *Q.*—SRI A. VEDARATHNAM :** கனம் முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கலைநேசன் பத்திரிகையின்

(1) ஆசிரியர்,

(2) பிரசுரிப்பவர் ஆகிய இவர்களின் பேரில் எத்தனை தடவை இது வரையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

(ஆ) எந்தெந்த குற்றத்திற்காக ?

(இ) அவற்றின் முடிவென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Seven.

(*b*) Publication of obscene matter.

(*c*) Conviction secured on all the seven occasions.

Irrigation and cultivation

*** 133 Q.—SRI A. VEDARATHNAM :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் ஜில்லா, பட்டுக்கோட்டை தாலூகாவில் உள்ள ஏரிப் புரக்கரை, தம்பிக்கோட்டை கிராமங்களில் உள்ள அலையாத்திக்காடு எனப் படுகிற பெரிய நிலப்பரப்பை சாகுபடிக்கேற்றதாக்க உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(ஆ) வடிகால் பாதையைச் சீர்திருத்துவது மூலமாக மேற்சொன்ன தாலூகாவில் உள்ள நசுனியாறு நதியின் வெள்ளப் பெருக்கை சமுத்திரத் தில் சேர்த்துவிடுவதற்காக பரிசீலனை ஏதாவது செய்யப்பட்டதா ?

(இ) நசுனியாறு நதியின் வடிகாலை சீர்திருத்தி, அதன் தண்ணீரை அலையாத்திக்காடு எனப்படுகிற காட்டுப்பிரதேசத்தின் நீர்ப்பாசனத்துக்காக வும் சாகுபடிக்காகவும் உபயோகித்துக்கொள்வதென்று அரசாங்கத்தார் உத்தேசித்திருக்கிறார்களா ?